
ஓம்

காரைநகர் பொதுநல சேவா சங்கம்

சக்கலாவோடை கிளை.

# ஆண்டு நிறைவு மலர்.



வெளியீடு :

காரைநகர் பொதுநல சேவா சங்கம்

சக்கலாவோடை கிளை

1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. எம். லோன்றி

உரிமையாளர் : **M. குணநாயகம்,**

61, மின்சார நிலைய வீதி,

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

பட்டு, பருத்தி, எவ்வகையாலான ஆடைகளாயினும்
உங்கள் விருப்பத்திற்கமைய சிறந்த முறையில்
சலவை செய்து தருபவர்கள்.



*Space Donated*

அன்பளிப்பு

*By*

பொதுநல சேவா சங்கம்
சக்கலாவோடை கிளை
காரைநகர்

## S. A. SOMASUNDARAM

Merchants & Pawn Brokers

**180, Hospital Road,**

Phone : 553 — JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர ஜவுளி வகைகளுக்கு யாழ்நகரில்
முன்னணியில் விளங்கும் ஸ்தாபனம்

**M. O. ஸன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் (முனீர்ஸ்)**

79, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்

போன் : 404

நவீன மின்சார உபகரணங்களுக்கு
நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த ஸ்தாபனம்

**எம் மோ ஸன்ஸ் எலெக்றிக்கல்ஸ்**

— மின்சார ஒப்பந்தகாரர்கள் —

மும்ஸாக் பில்டிங்: ஸ்ரான்லி வீதி ; யாழ்ப்பாணம்

போன் : 374

**SIVAKANTHA STORES**

GENERAL MERCHANTS

**66 & 66, NEW MARKET**

**JAFFNA.**

*

**சிவகாந்தா ஸ்டோர்ஸ்**

உரிமையாளர்: திருவாதர் கந்தசாமி

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை.

ஒரு கிராமத்தின் முன்னேற்றத்துக்கு, அக்கிராமமக்களின் ஒற்றுமை, உழைப்பு என்பன இன்றியமையாதன. இவையேயன்றி, அங்குள்ள பொதுஸ்தாபனங்களின் தொண்டும் வேண்டப்படுவதாகும்.

காரைநகர் மக்களின் முன்னேற்றங் கருதித் தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்கள் பல. அவற்றுள் இன்று இயங்கிவரும் காரைநகர் பொதுநல சேவா சங்கம், சக்கலாவோடை (கிளை) பொருளாதாரம், சுகாதாரம், அறிவியல், சமயம் என்பவற்றின் வளர்ச்சிக்காகச் சென்ற ஓராண்டு காலம் உழைத்து வந்துள்ளது.

பிரதானமாக, யோகாசனப் பயிற்சி நடைபெறுதல் சங்கத்தின் சாதனையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. மேலும், பயிலும் மாணவர்களின் ஊக்கம், இச்சங்க வளர்ச்சிக்கு வலுக்கொடுப்பதை நான் உணரத்தக்கதாக விருக்கின்றது.

இச்சங்கத்தார் தங்களது உயிரெனக் கருதி அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் பெரு முயற்சிகளெல்லாம் நற்பயனளித்தனபோன்று ஒரு சஞ்சிகை வெளியிட்டுள்ளனர்.

இச்சஞ்சிகையில், சமயம், பொருளாதாரம், வைத்தியம் முதலிய பொருள்கள் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் வாசிப்போர்க்கு அறிவை வளர்க்கும் தன்மையோடு காலத்திற்கேற்ற கருத்துப் புரட்சியையும் உண்டாக்க வல்லன.

ஆண்டு மலராகப் பிரசுரிக்கப்பட்ட இச்சஞ்சிகை, மக்களிடம் பொதுநல நோக்கு வியாபித்துள்ளதை ஊர்ஜிதப்படுத்துகின்றது. ஆகையால், அறிவறிந்த தமிழ் மக்கள் இதனை வாசிக்க ஆவற்படுவார்கள் என்பது எனது பரிபூரண நம்பிக்கை.

இங்ஙனம்

சி. ஐயாத்துரை B. A. (Lond)
இளேப்பாறிய ஆசிரியர், காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிரசங்கம்
    பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா லைபலவும்
    நாட்டி யுந்தம்
குலமுயர நகருயர நாடுயர உழைக்கின்றார்,
    கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க,
    நிலத்தின் மீதே!

(சுப்பிரமணிய பாரதியார்)

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | யோகாசனம் | 1 |
| 2. | அன்பே சிவம் | 5 |
| 3. | தின்னபுர வெண்பா | 8 |
| 4. | ஆலயவழிபாடு | 11 |
| 5. | சமூக வளர்ச்சியில் சனசமூக நிலையங்களின் பங்கு | 15 |
| 6. | வைத்தியமும், சோதிடமும் | 21 |
| 7. | உரிமையும் சலுகையும் | 25 |
| 8. | வாழ்த்துப்பா | 29 |
| 9. | Message in English | 30 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம்

(சுவாமி ஸ்ரீ சிதானந்தயோகி)

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு நல்ல உடல் அவசியம். நல்ல உடலை எங்ஙனம் பெறுவது? நல்ல தேகத்தைப் பெற்றுச் சுகமாக வாழ்வதற்குப் பல வழிகள் உண்டு. எனினும் யோகாசனம், பிராணுயாமம் முதலிய வழிகளே சிறந்தவை என்று யோகிகள் கூறுவர்.

யோகாசனம் என்ருல் என்ன? பிராணுயாமம் என்ருல் என்ன? நல்ல உடலைப் பெற்று ஆரோக்கியமாக வாழ்வதற்கு யோகக்கலையைப் பயன்படுத்த விரும்புபவர்கள் இந்த இரு வழிகளையும் தெரிந்திருத்தல் அவசியம்.

நல்ல உடலைப் பெற நல்ல இரத்தம் தேவை. நல்ல இரத்தத்திற்கு நாடி சுத்தி அவசியம். அத்துடன் உயிர்ச்சத்து நிறைந்த உணவைத் தேர்ந்து உண்பதும் அவசியம். மாத்திரைகளை உட்கொள்வதன்மூலம் உடலாரோக்கியம் பெறலாமெனச் சிலர் நம்பி அவற்றுக்கு அடிமையாகி உடலை மேலும் கெடுத்துக்கொள்கின்றனர். கோப்பி, தேயிலை, கொக்கோ முதலிய பானங்களும் உடலாரோக்கியத்தைப் பாதிப்பனவாகும். யோகப் பயிற்சிக்கு இவை எதிர் மாருன பலனைக் தரும். மற்றும் புகைத்தல், மதுபானம், புலால் உணவுகளும் யோகப்பயிற்சியிலீடுபடுபவர்களுக்கு அவசியம் தவிர்க்கப்படவேண்டியவையாகும்.

தசைகளை இயக்குவன நரம்புகள். நரம்புகளை இயக்குவன பொறிகள். பொறிகளை இயக்குவது மனம். மனதை இயக்குவது புத்தி. புத்தியை இயக்குவது ஆன்மா. உடலையும், மனதையும் இணைப்பது உயிர் அல்லது பிராணன். பிராண சக்தியை வளர்த்தால் உடல் தெய்வத்தன்மையைப் பெறும்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் நடுவே இருப்பது மனம். மனம் வேறுபட்டு அலைந்து திரிந்தால் மனிதன் இயற்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராட்சத குணங்களில் கட்டுண்டு அல்லற்படுவான். மனம் உள்ளொடுங்கி சுத்த ஆன்மாவில் லயித்தால் மனிதன் தேவனாகி இன்பமுறுவான். மனம் தம்முன் உள்ள தெய்வப் பொருளுடன் ஒன்றுபடுவதே யோகம். மனதை வென்று தெய்வப் பொருளுடன் ஒன்றுசேர நமது பாரத நாட்டு மகான்கள் பல யோகாசன முறைகளைக் கண்டார்கள்.

இல்வாழ்வை நல்வாழ்வாக்கி ஈற்றில் திருவடி சேர்வதற்காக இறைவன் நமக்குத் தந்த இந்தயாக்கை மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் எனப்படும். தூலம் கண்களால் பார்க்கக்கூடியது. சூக்குமம் கண்களால் காணமுடியாதது. காரணசரீரமானது, அதனிலும் சிறியதாக ஆட்சிபுரிவது. ஐம்பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவற்றாலான தூலமே காணக்கூடிய சரீரம். நிலம் அதாவது மண்ணின் சக்தி கொண்டது சரீரத்தின் அம்சங்களான தோல், தசை, எலும்பு, நீரின் சக்தியையுடையது வாய், நாக்கு. கண்கள் தீயின் சக்தியையும், மூக்கு வாயுவின் சக்தியையும், செவிகள் ஆகாயத்தின் சக்தியையும் கொண்டுள்ளன.

சரீரத்தில் மண்ணின் சக்தி அதிகரித்தால் கிரந்தி மற்றும் புரை நோய்கள் ஏற்பட ஏதுவாகும். ஜலத்தின் தன்மை கூடிக் காணப்பட்டால் வாதரோகம் முதலிய நோய்களும், வாயுவின் சக்திமேலோங்கினால் வாய்வு சம்பந்தமான நோய்களும், அக்கினியின் சக்தி அதிகமானால் உஷ்ண வியாதிகளும் உண்டாகும். ஆகாயத்தின் சக்தி அதிகமானால் கேட்டல், வசனித்தல் முதலியவை பாதிக்கப்படும்.

பிராண, அபான, வியான, உதான, சமான என்ற ஐந்து வாயுக்களும் மற்றும் ஐந்து உப வாயுக்களும் சேர்ந்தது சூக்கும சரீரம். இந்த வாயுக்களில் ஒன்றேனும் கூடினாலும், குறைந்தாலும் சரீரத்தில் நோய் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண சரீரம், உயிர். இந்த உயிர் சகல தத்துவங்களை யும் கொடுக்கவல்ல ஈஸ்வரத்தன்மை பொருந்தியது.

மனிதன் பூரணத்துவமான வாழ்வைப் பெற உடற் பிணியும், உளப்பிணியும் நீங்கப்பெற வேண்டும். யோகக் கலையின் அம்சங்களான கடயோகத்திலும், ராஜ யோகத் திலும் இப்பிணிகளை நீக்கலாம்.

யோகக்கலை எல்லையில்லாததொன்று. மகா ஞானிகள் மட்டுமே இதன் இரகசியங்களைப் பூரணமாயறிவர். இதன் முழுமையை அறிய விரும்புபவர் தக்க யோகியை அணுகித் தெளிந்துகொள்ளல் வேண்டும்.

இந்த யோகக்கலை, நம் தேசமான ஈழநாட்டிலே மூளைகொண்டது. இன்று அது நாகரீகத்திலும் விஞ்ஞானத்திலும் முதிர்ச்சியடைந்துள்ள மேலை நாடு களிலும் பரவிப்பயன்கொழித்து வருகிறது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், ரஷ்யா, இங்கிலாந்து, சீனு முதலிய நாடுகளில் யோகக்கலையின் உண்மை உணரப்பட்டதால், அஃது அந்நாடுகளில் பெருமையுடன் திகழுகிறது. குறிப்பாக, அமெரிக்கக் கோடீஸ்வரர்கள் யோகக்கலையில் மோகித்துப்போயுள்ளனர். அங்கு இக் கலையில் விஞ்ஞான ரீதியான ஆராய்வும் நடைபெற்று வருகிறது ஆயினும், நம்மவர்கள் யோகக்கலையில் அவ்வள வாக அக்கறை காட்டவில்லையென்றே கூறவேண்டும். எனதன்பான பெரியோர்களே! தாய்மாரே! யோகக்கலை பயின்று உங்கள் உடற்பிணியையும், உள்ளப்பிணியையும் போக்குங்கள். நாட்டின் வருங்காலச் செல்வங்களான உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ்ந்து தமக்கும் குடும்பத் திற்கும் நாட்டுக்கும் பயன்பட அவர்களை யோகக்கலையில் ஈடுபடுத்துங்கள். இதனைப் பயின்முல் வாதம் வாட்டுகிற தென்றோ, தொய்வு முட்டுகிறதென்றோ, மூலம் வதைக்கிற தென்றோ, இனி மேலும் அழுதுகுளறமாட்டீர்கள். சல ரோகம், இருதயவாதம் உட்பட சகலவாதரோகங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல மூல நோய்கள், புரைநோய்கள், தொய்வு, நெஞ்சுடன் சம்பந்தப்பட்ட நோய்கள், மற்றும்சகல நோய்களையும் யோகாசனம் மூலம் வேரோடு களைந்தெறியலாம்.

நமது அரசு ஆஸ்பத்திரிகளைக் கட்டிவைத்து மருந்துகளுக்காக எத்தனையோ கோடி ரூபாவைச் செலவழிக்கிறது. ஆஸ்பத்திரிகளும், டாக்டர்களும் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் ஊருக்கொரு யோகாசனப் பயிற்சி நிலையம் அமைத்து, மருந்துச் செலவை வெகுவாகக் கட்டுப்படுத்த முடியும். இளமையிலேயே மனிதனை நோய் பிடியாதிருக்க யோகாசனப் பயிற்சியைப் பள்ளிக்கூடங்களில் ஒரு பாடமாகப் போதிக்கலாம். இதன்மூலம் மாணவர்கள் ஒழுக்கமாகத் திகழவும், காலப்போக்கில் ஒழுக்கம் நிறைந்த சமுதாயம் அமையவும் வழிபிறக்கும். கல்விப்பகுதியாரும் பெற்றோர் ஆசிரிய சங்கங்களும் இதுபற்றி யோசிப்பார்களாக.

* ——— *

## யோகசித்தி

தோளை வலியுடைய தாக்கி — உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி — அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும் — கட்டு
மாறா வுடலுறுதி தந்து — சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல் — ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து — மத
வேளை வெல்லுமுறை கூறித் — தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.

(சுப்பிரமணிய பாரதியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்.

(சைவப் புலவர் சி. திருநாவுக்கரசு)

பல தரப்பட்ட மக்களை ஒரு குடும்பமாக இணைத்து வைத்திருப்பது அன்பு. அன்பு இல்லாத இடத்தில் பகைமை தீ போல் சுடுகின்றது. எவ்வளவு பகைமை இருந்தாலும் அன்பு வளரும் பொழுது பகைமை நீங்கிவிடுகின்றது. ஆற்றல் வளர பயம் நீங்குகின்றது. அறிவு வளர அறியாமை நீங்குகின்றது செல்வம் வளர தரித்திரம் நீங்குகின்றது. விவேகம் வளர மாயா மயக்கம் நீங்குகின்றது. ஒளி வளர இருள் நீங்குகின்றது. இறைவன் திருவருள் உள்ளத்தில் சேர சகல சஞ்சலமும் நீங்கி இன்பம் கிடைக்கின்றது. சிவஞானம் சேர பேசா அனுபூதி கிடைக்கின்றது.

துன்பம் தரும் பொருள்களையும் துன்பத்தை நீக்கி இன்பம் தரும் பொருள்களையும், இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கும் உயிரையும், எம் அனுபவத்தில் நாம் நேரே அறிய முடிகின்றது.

மனைவி, மக்கள் மீது வைத்த பாசத்தினால் எமது பொருள் உடல் உழைப்பு ஆற்றல் அனைத்தையும் அவர்கள் சுகத்திற்காக அர்ப்பணிக்கின்றோம். அவர்களின் வளர்ச்சியும், முன்னேற்றமும் எமக்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தருகின்றது. அதுபோல் எல்லா உயிர்களுக்கும் தந்தையும் தாயுமாகி அன்பு செய்யும் சிவபெருமான் உயிர்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு இந்த உலகைப் படைத்து, அதில் பல வளங்களைச் சேர்த்து இருக்கிறார். நாம் சுய முயற்சியின்றி வாழ்ந்த போதிலும் இயற்கை உணவையும் மருந்தையும் அளிக்கின்றது. சகலருடனும் பகிர்ந்து உண்டு அன்புடன் வாழ்வதே இறைவனுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும். இக்கருத்தை சுப்பிரமணிய பாரதியார் ஓர் பாடலில் மிகவும் தெளிவாகக் காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர் உழாவிடினும் வரம்பு கட்டாவிடினும் வித்து
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள் [நடாவிடினும்
கொடிகள் புற்கள் நெற்கள் மலிந்திருக்கும்
ஆனதினால் யான் எதற்கும் அஞ்சுகிலேன்
மானிடரே நீவீர் என் மதத்தைக் கைக் கொண்மின்
பாடுபடல் வேண்டாம் ஊன் உடலை வதைக்காதீர்
உணவு இயற்கை கொடுக்கும் உங்களுக்குத் தொழில்இங்கே
அன்பு செய்தல் காண்டீர்.

பூமியில் வாழும் உயிர்களின் சேமத்திற்காக பருவம் தவறாது மழை பொழிய மரம், செடி, கொடிகள், புற்கள் நெற்கள் தாமாகவே வளர்ந்து இயற்கையாகவே உணவு எமக்கு அளிக்கின்றன நாம் அவற்றைச் சேகரித்து பலருடனும் பகிர்ந்து உண்டு மகிழ்வதே தர்மமாகும். நாம் எமது சொத்துக்களை இயற்கைக்கு அர்ப்பணிக்க, இயற்கை தமது வளத்தை எமக்கு அர்ப்பணம் செய்கின்றது. இந்த பரஸ்பர உறவால் மனித குலமும், ஏனைய குலமும் இன்பமாக வாழ்கின்றன.

இயற்கைக் கூடாக உணவு. உடை. பாதுகாப்பு அளிக்கும் இறைவன் எமது அந்தக் கரணங்களுக் கூடாக அறிவு. ஆற்றல், அழகு, செல்வம் விவேகம் முதலிய தெய்வீக சக்திகளைத்தருகின்றார். இத் தெய்வீக சக்திகள் எமக்கும், பிறர்க்கும் இன்பம் தருவன.

இறைவன் உயிர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வதற்காக ஒவ்வோர் நெஞ்சிலும் எழுந்தருளி திருவருள் ஊட்டுகின்றார். திருவருள் ஆவியோடு ஆக்கையை ஆனந்தமாகக் கசிந்து உருக்குகின்றது.

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரமல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்கிலேன் ஓர் கைமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்புமாய் பின்பு முழுதுமாய் பரந்தமுத்தனே
முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடை சிவபுரத்தரசே.

அன்பே வடிவான சிவபெருமான் எம் பொருட்டாக சகல இயற்கை வளங்களையும் அறிவு, ஆற்றல், செல்வம் முதலிய அந்தக்கரணங்களையும் அருள் ஆகிய அருள் வளத்தையும் தந்து இருப்பதனுல், நாமும் எமக்குக் கிடைத்த வளங்களை சகலருடனும் பகிர்ந்து அனுபவித்து, அன்பால் உறவாடி உடல், பொருள், ஆவி மூன்றும் இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்வதே எம்மை ஆளும் சிவபெருமானுக்கு நாம் செய்யும் சிறந்த பூசையாகும்.

* * * * * * *

காலன் நெருங்குகிறுன். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்துவரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனேயாவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. யமனின் பாசக் கயிற்றினின்று தப்ப இதுவே வழி.

பொருளின் மீதுள்ள பேராசையை விடு. உழைப்பால் அடைந்ததை வைத்துக் கொண்டு திருப்தியடைவாயாக.

பெண்ணின் உடலழகைக் கண்டு மதி கலங்காதே. அழகிய உடலானது இறுதியில் அழியும் சதைதானே என்பதை அடிக்கடி யோசித்துப் பார்! புலன்களை அடக்கு. உலகப் பற்றை விடு.

நோயும் 'நான்' என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இவ்வுலகம் சோகமானது; தாமரை இலை மீதுள்ள நீர்த் துளிபோல நிலையற்றது. இதனை உணர்வாயாக.

– சங்கரர் பொன்மொழிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணபுர வெண்பா

(கு. பொன்னையா, தலைவர், இ. ச. சே. ச.)

பண்டுதொட்டு புகழோடிருந்த ஈழநாட்டில் தமிழராட்சி அழிந்து போத்துக்கீசர், ஒல்லாந்தர் என்பவர் முறையே ஆட்சி செலுத்தினர். இதன் காரணமாக, புறச்சுதந்திரத்தை இழந்த மக்கள் அகச் சுதந்திரத்தை இழக்கவில்லை.

அன்பு, காதல், கடவுள்பற்று, மொழிப்பற்று என்பன அகச் சுதந்திரத்தின்பாற்படும். பொருள், பட்டம், பதவி, தேகசுகம், புகழ் என்பன புறச் சுதந்திரத்தின்பாற்படும்.

ஏறக்குறைய 300 ஆண்டுகள் வரை ஈழநாட்டு மக்கள் அகச் சுதந்திரத்தை இழக்காது, சிவத்தையும் தமிழையும் அகத்திலே நிலைநிறுத்தி வைத்திருந்தனர். மக்கள் இவ்வாறு சந்ததி சந்ததியாகப் பக்குவப்படுத்தியதால், 19ஆம் நூற்றுண்டில் ஆறுமுகநாவலரும், இன்னும் இவர் போன்ற பலரும் இவ் ஈழநாட்டின் கண்ணே தோன்றினர். இவர்கள் சைவத்தையும் தமிழையும் வீறுநடைபோடச் செய்தனர்.

ஈழநாட்டில் ஆங்கிலேயர், அரசாட்சி தோன்றியதும் அடங்கியிருந்த அகச் சுதந்திரம் வெளிப் போந்தபோது ஆறுமுகநாவலர் பிறந்தார். இவர் பிறந்தமை சமயமொழி மறுமலர்ச்சியின் அறிகுறியேயாகும். இதன் பின் ஏற்பட வேண்டிய தேசிய மறுமலர்ச்சி பட்டம், பதவி, பணம் என்னும் புறப் பொருள்களுக்கு ஈடுவைக்கப்பட்டது.

இவ்வாறு புறப்பொருள்களில் ஈடுபடாது வாழ்ந்த அம்பலவி முருகர் என்போரின் வழி ஒழுகியவர் பஞ்சாக்ஷரக் குருக்கள் அவர்கள். தமிழ் மக்கள் 64 கலைகளையுடையவர்கள். இக்கலைகளுக்கெல்லாம் ஆதி தத்துவமாயிருப்பவர் சிவபெருமான். அவர் இக்கலைகளையெல்லாம் உணர்ந்த அவதார புருஷர்களை உண்டாக்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கலாதத்துவத்தின் காரணமாக மக்கள் பண்டு தொட்டு சிவபெருமானை அகத்தாலும் புறத்தாலும் வழி படற்குக் கருவியாகிய வடமொழியும், தென் மொழியும் சிறப்புற்று விளங்கிற்று.

சிவம் என்னும் வித்து முளைத்தபோது ஆண்டி, அம்பலவி முருகர் என்பவர்களாகத் தோன்றியது. இதன் காரண மாக திண்ணபுரத்தில் ஒரு சிவத்தலம் தோன்றியது. சிவன் திண்ணபுரத்தில் தோன்றியபோது அவரைப் போற்றிப் புகழ்ந்து பரவுவதற்கு வடமொழியும் தென்மொழியும் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சியின் தோற்றம்தான் பஞ்சாக்ஷரக் குருக்கள் அவர்கள். தொகை அடியார்க ளாகிய "பொய்யடிமை இல்லாத புலவர்" "முப்போதும் திருமேனி தீண்டுவார்" என்ற இருவகையிலும் அடங்குவர்.

குருக்கள் அவர்கள் திண்ணபுரத்திலுள்ள சிவனை அல்லும் பகலும், நாளும்பொழுதும், இடையறுது நினைந்துருகி வணங்கி அனுபவித்தபயன் தான் திண்ணபுர வெண்பாவாகும். இது நூறு பாடல்களை உடையது. தூமறை பாடும் வாயால் சொற்றமிழ் பாடுவிப்பது சிவபெருமானின் வழக்கம்.

செய்யுள் வகையில் வெண்பாவை பிராமண சாதி யென்பர் தமிழறிஞர். இதனுற் போலும் வெண்பாவில் பரவினர். இன்னும் வெண்பாவில் ஈடுபாடுடைமை

"கன்னியரும் வெண்பாவும் காசோடு நாண் மலரும்
பின்னியல் பிறப்புமார் திண்ணபுரம்—தன்னிகரில்
சைவத் திரு நெறியின் சாயுச்சிய தாதனென்
கைவல்ய னுறைவு காண்"

என்னும் வெண்பாவினுல் அறியக் கிடக்கின்றது. இவ் வெண்பாக்கள் சிலேடைக் கருத்துக்களையுடையன. கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கள் காலத்தோடு ஒட்டியும் மறுமலர்ச்சியுடையதாயும் காணப்படுகின்றது. இன்னும் பழைய கருத்துக்களைப் புது முறையில் ஆண்டிருப்பதும் மகிழ்தற்குரியது. படிக்குந் தோறும் பக்திச் சுவையை மேலோங்கச் செய்யும், இவ்வாறு சிவபெருமானின் பெருமைகளைப் பலவாறு புகழ்ந்து சொல்லுகையில், குருக்கள் அவர்கள், அவர் குடிகொண்ட புண்ணிய பூமியில் மிகவும் ஈடுபட்டு அனுபவித்தார். இதை,

"திண்ணபுரப் பேரே சிவகதி நல் வாழ்வருளல்
திண்ண மெனக் கண்டு தெளி"

என்னும் அடிகளால் உணரலாம்.

சோதிடக் கருத்துகள். மந்திரக் கருத்துகள், தமிழின் இனிமை, சிவத்தின் பெருமை என்பன தோன்ற பாடியுள்ளமை, எம்மால் அளவிடற்கரியது. இப்பாடல்கள் எல்லாம் மந்திர சக்தியுடையன. பக்திசிரத்தையுடன் படிப்பவருக்கு சிவபொருமானின் அருள் கிட்டும்.

திண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் காரை நகருக்குமட்டும் அருள் செய்யவில்லை. ஈழநாட்டிற்கும் எல்லா உலகத்திற்கும் அருள் செய்து கொண்டிருக்கின்றார். திண்ணபுர வெண்பாவை தமிழ்மக்கள் எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும். இவ்வாறு ஈழநாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் படிக்கின்ற காலம், தமிழ் மக்களின் உச்சமான காலமாகும்.

ஆகையால் இத் திண்ண புரவெண்பாவைத் தகுந்த உரையுடன் ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் பரப்ப இப் பொதுநல சேவா சங்கத்திற்கு திண்ணபுரத்திலுள்ள சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப்பெருமான் அருள் பாலிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயவழிபாடு

(மு. பரமநாதன், கௌரவ காரியதரிசி, கா. பொ. சே. ச.)

"ஆலயந் தொழுவது சாலவுந் நன்று" என்பது ஔவை அருள்வாக்கு. அதன் பொருள் கோயில் தோறுஞ் சென்று அரனை - ஆரணனை - இறைவனை - ஈசனை - உமைபங்கனை - ஊரிலானை எண்ணுவார் எண்ணத்தானை - ஏறூர்ந்த செல்வனை ஐயனை - ஒண்பொருளை - ஓங்காரத்துட் பொருளை மனத்தான் நினைத்து, வாக்கால் வாழ்த்தி, தலைமுதலாய உடலுறுப்புக்களால் அட்டாங்க, பஞ்சாங்க வணக்கங்கள் செய்து வழிபாடு இயற்றுவது என்பது. மனிதப் பிறப் பெடுத்தோர் ஒவ்வொருவர்க்கும் மிகவும் பொருந்துவ தாகும்; நன்மையும் பயப்பதாகும் என்க.

ஆலயம் என்பது உலக நோக்கங்களில் புலன்களைச் சிதற விட்டு அல்லலுறும் ஆன்மாக்களை - உயிர்களை - வழிப் படுத்தி இறைவனை நினைக்கச் செய்யுமிடம்.

"ஆலயந்தானும் அரனெனப்படுமே"

என்பது ஆன்றோர் வாக்கு.

உடல் வளர்ச்சிக்கு எப்படி உணவு தேவைப்படுகிறதோ அதே போன்று உள வளர்ச்சிக்கு ஆலய வழிபாடும் தேவைப்படுகின்றது. உடலும் உள்ளமும் சரிவர ஒன்று பட்டு வளர்ச்சி பெறுமாயின் மனிதன் நிம்மதியாக வாழ வழியுண்டு. பண்டைக்காலத்தில் எங்கள் மூதாதையர் இவ் விரண்டினையும் ஒருங்கே வளர்த்து வந்தனர். அதனால், அவர்கள் பண்பாட்டுடனும், தேகாரோக்கியத்துடனும் வாழ்ந்து வந்தனர்.

இன்று சமநிலையற்ற உலகாயத வாழ்க்கையினையே நிலையானது - மேலானது என்று கருதி, உளவளர்ச்சியோடு கூடிய பண்பாட்டினைக் கைநெகிழ விட்டு அல்லல் உறுகின் றோம். முந்தையோர் கண்ட சமய வாழ்க்கையில் நித்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் என்பது ஒன்றுண்டு அதில் உள்ள பிராணுயாமம் (மூச்சு வாங்கி நிறுத்தி விடுவது) பல்வேறு உடற்பிணிகளை நீக்கவல்லது. அத்தோடு உயிர்க்கும் உய்தி கூட்டுவது.

மக்களிடையில் அன்பும் அறமும் தழைத்தோங்கி நிலை பெற வேண்டும். இதற்கு உறுதுணையாயுள்ளது, ஆலயம். இதனை உணர்ந்தே ஆன்ருேர் ஆலயங்களை மத்திய தானமாக வைத்துத் தம் வாழ்க்கையை நடத்தினர். இடையிட்ட காலத்தில், நாகரீகத்தின் நாமத்தால் எல்லோரும் பொருள் ஈட்டுவதில் தம்புலனை விட்டனர். அதன் விளைவாக அன்பும் அறமும், நாளாந்தமாகக் குன்றிக் குறைந்து வருகின்றது. இந்நிலையை மாற்றி மீண்டும் எங்கள் மூதாதையினர் எப்படி அன்பிற்கும் அறத்திற்கும் முக்கிய இடமளித்து வாழ்ந்து வந்தனரோ அதே வண்ணம் நாங்களும் போலி விழாக்களை நடாத்துவதில் காலத்தைப் போக்காது, உண்மையான அமைதியைத் தரவல்ல ஆலய வழிப்பாட்டைச் செய்து வர முயற்சிக்க வேண்டும். இத்துறையில் இளைஞர்களை வழிப் படுத்துதற்குப் பெற்ருேரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். இதற்குச் சங்கங்களும் ஆவன செய்ய வேண்டும். காரை –பொதுநல சேவா சங்கம் இத்துறையில் முன்னின்று உழைத்து வருகின்றதென்பதைக் கூறுவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

செல்வம், கல்வி, வீரம் ஆகியவை மக்கள் வாழ்விற்கு முக்கியமானவை. இம்மூன்றையும் இறைவன் தமது சக்திகளைக்கொண்டு எமக்குக் கொடுத்தருளுகின்ருர். நவராத்திரி பூசையின் கருத்து மேற்கூறியவைகளை மக்கள் வாழ்வில் மிளிரவைப்பதேயாகும். இவ்வேற்றக் குறைவுகளை ஆலய வழிபாடு நீக்க வல்லது.

ஆலயவழிபாடு சிதைந்து அல்லலுறும் மனத்திற்கு ஆறுதல் அளிக்க வல்லது. இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பண்பினன், ஆதலால், எம்குறைகளை முறையிட்டு அருள் பெறுதற்கு உரிய இடம் ஆலயம். அங்குதான் அமைதி காணமுடியும். மனச்சாந்தி பெற்ருல் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள், வாய்ப் பேச்சுக்கள், எழுத்துக்கள், செயல்கள் எல்லாம் சரியாக நடைபெறுவது திண்ணம். ஆனுல், நம்ம வரிற் சிலர் அவ்விடத்தை வேடிக்கைக்குரிய இடமாகக் கருதி வேண்டாத அளவுக்கு மிஞ்சிய செலவினங்களையுஞ் செய்து புனிதத் தன்மையைப் பாழாக்கி விடுகின்றனர். வழிபாட்டிற்குச் செல்வோரிற் பலர் களியாட்டு விருப்பினராய்த் தமக்கு விருப்பமான நிகழ்ச்சிகள் இடம்பெறின் அன்றி மற்றைய வேளைகளிற் கோயிற் பக்கமே கண்ணெடுத்தும் பார்க்கின்றிலர். இவ்வித மனப்பான்மை தற்போது மலிந்து விட்டதைக் கண்டு கவல வேண்டியுளது.

ஆலய வழிபாட்டுக்கு உகந்தது யாதெனில் தூய்மையான மனமேயாகும் இதனையே,

" வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிற மலருமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனுர் வேண்டுவது.

என்று பாடியுள்ளனர்.

" கடி மனம் அடிமையாக "
' ஐம்புலனும் அகத்தடக்கி'

என்பன வழி பாட்டின் சில நெறிகளை வெளிப்படுத்துவன. நால்வரும், மற்றையோரும் பேறடைந்த பெரியோர்கள். அவர்களே கோயில்கள் தோறும் சென்று பாடிப் பணிந்தனர். எனவே, அவர்கள் காட்டிய நெறியில் ஆலயங்கட்குச் சென்று வழிபடுதல் விரும்பத்தக்கது.

சிலர் தங்கள் தங்கள் இல்லங்களிலே தெய்வத்தை வழிபட்டு வருவதற்கென ஒரு அறையை ஒதுக்கி வைத்திருக்கின்றனர். தினந்தோறும் வழிபட்டு மனச்சாந்தியும் அடைகின்றனர். இதுவும் வரவேற்கத் தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஆலய வழிபாட்டிலுள்ள சில வசதிகள் இங்கு காணப்படுவதில்லை. இதனாற்றான் நாங்கள் ஒவ்வொருவரும் நாள்தோறும் ஆலயத்திற்குச் செல்ல முடியாவிடினும், வருடப்பிறப்பு, மாசப்பிறப்பு, வெள்ளிக்கிழமை, மற்றும் விசேட தினங்களில் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றோம். இங்கு மூர்த்தியின் அருளை, அர்ச்சனைகள் செய்து அடைகின்றோம். வேறு துதிப்பாடல்கள், கூட்டு வழிபாடுகள், சமயச் சொற்பொழிவுகள் ஆதியனவும், மந்திர செபங்கள் போன்றனவும் மனத்தைத் தன்னிலைப் படுத்தி வைக்கின்றன.

எம்மைப்பற்றியுள்ள மலங்களாகிய 'நான்' 'எனது' என்பன படிமுறையே தன் செயலிழக்கத் திருவருள் எம்மை ஆட்கொள்ளுகிறது. இது எமக்குத் தோற்றமலே நடக்குஞ் செயல். திருவருள் பெற்றும் பெருதவர்போல் பேதமைக்குணத்தினால், பழவினை காரணமாக அலைகிறோம். இதனைத் தீர்ப்பதற்கு வைராக்கியம்–மனஉறுதி வேண்டும். அதுவும் அவனருளால் எமக்குக் கிடைக்க வேண்டும். அதற்காகவே எங்கும் வியாபகமாய் நிறைந்திருக்கும் இறைவனை ஆலயத்திற் பிரதிட்டை செய்து வைத்திருக்கும் மூர்த்தியினிடமாகக் கண்டு உணர்ந்து பயன்பெற ஆலயஞ் செல்வோமாக.

மனிதப்பிறப்பின் பயனடைய ஆன்றோர் வகுத்த நெறிகளுள் ஆலயவழிபாடு கற்றார்க்கும் பயன்தர வல்லது. மனிதப்பிறவியை எடுத்த நாங்கள் அப்பிறவியின் பயனை அடைய முயலாவிடின் பிறப்பினால் ஆவது ஒன்றுமில்லை. பிறப்பு பந்தங்களை விட்டு வீட்டு நெறியை அடைவதற்கே கடவுளால் எமக்குக் கொடுக்கப்பட்டது. ஆதலின், அதனை மனத்தின் கண் பதித்து அரனடி அடைய முயல்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வளர்ச்சியில் சனசமூக நிலையங்களின் பங்கு

(ஜெ. தில்லையம்பலவாணவர், கணக்கியல் பயிற்சியாளர்)

பேர், புகழ், சீர், சிறப்பு ஆகியவற்றுடன் ஒரு சமூகம் வாழ்கிறது என்றால், அச்சமூகத்தின் பொருளாதார நிலை, அரசியல் சுதந்திரம், இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் முறை, சமூகத்தின் சூழல், கல்வி நிலை என்பன சிறந்த முறையில் அமைந்திருப்பதே காரணம் எனலாம். இது போன்ற ஒரு நிலை ஏற்படச் செயல்படும் சனசமூக நிலையங்களின் எண்ணிக்கை, பொதுநல சேவை செய்யும் சங்கங்களின் சேவைகள் என்பன ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்றன என்றால் - இதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

மலைபோல அலைமோதும் ஆழ்கடலின் மத்தியிலே - அலைந்து திரியும் மரக்கலங்களுக்கும், மனம் குலைந்து நிற்கும் மாலுமிகளுக்கும், தன் ஒளி காட்டி வழிகாட்டும் கலங்கரை விளக்கம் போலச், சனசமூக நிலையங்களும், பொதுநல சேவை செய்யும் சங்கங்களும், கிராமங்கள், பட்டினங்கள் ஆகியவற்றில் மலிந்திருக்கும் ஊழல்களைக் களைந்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கட்டுக்கோப்பைக் கட்டிக் காத்து, இளைஞர்களின் பொது வாழ்வில் நற்பழக்கங்கள் உண்டாவதற்கு சீரும், சிறப்பும், பெருமையும் வாய்ந்த வாழ்வை அளிக்க ஆவன செய்யவேண்டும்.

விறகு வெட்டியாகப் பிறந்த ஏபிரகாம்லிங்கன், அமெரிக்க ஜனாதிபதி ஆனார் என்றால், போலந்தில் ஒரு பணக்காரக் குடும்பத்திலே வேலைக்காரியாக இருந்த மடம் கியூரி அம்மையார் புற்று நோய்க்கான ரேடியத்தைக் கண்டு பிடித்துப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆனார் என்றால் - அவர்களின் சொந்த முயற்சி மட்டும் அவர்களின் உயர்ச்சிக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் என நாம் கூறிவிடமுடியாது. இது போன்ற பொதுநல சேவை செய்யும் சங்கங்களும், ஏனைய சனசமூக நிலையங்களும் – நூல் நிலையங்கள் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததும் ஒரு காரணமாகலாம். பெறுமதி கூடிய புத்தகங்களை விலைக்கு வாங்கிப் படிக்கமுடியாத நிலையில் இரவலாக எடுத்துப் பயன்படுத்திப் பலன்பெற நூல் நிலையம் உதவுகின்றது. இளைஞர்களுக்கு நூல்களை இரவலாகக் கொடுத்து அவர்களின் கல்வித்துறையிலே ஊக்கமளிப்பதுபோல, முதியோர்களுக்கு முதியோர்வகுப்பை நடத்தி முதியோரின் அறிவுத்துறையிலே மலர்ச்சி ஏற்படுத்தி –அரசியல் துறையிலே தங்கள் வாக்குகளைத் திறம்படப் பயன்படுத்தி, அரசியல் அறிவுபடைத்தவர்களாக வாழ வழிகாட்டுகின்றது. இது போன்ற சங்கங்களும், நிலையங்களும் சமூகத்தில் சமயக்கல்வியைப் புகுத்திச் சமூகத்தைச் சமய வாழ்க்கைக்கு இழுத்துச்சென்று இல்லறம் நல்லறமாக அமைய வழிகாட்டுகின்றன. கொழும்பு விவேகானந்த சபையும், காரைநகர் மணிவாசக சபையும், சமய பாடப் பரீட்சை நடத்திப் பரிசளித்துக் கௌரவிப்பதன் மூலமும், ஆலயங்களிலும், பொது இடங்களிலும் சமயப் பிரசங்கங்கள் நடத்துவதன் மூலமும், சமயக்கல்வி சமூகத்தில் புகுத்தப் படுகின்றது எனலாம்.

பொருளாதாரத் துறையிலே அந்தந்தச் சமூக இயற்கை வளங்களுக்கேற்ப மக்களைத் தொழில் முயற்சிகளில் ஈடு படுத்தி வாழ்க்கை வளம் பெறத்துணை புரிகின்றன. இம் முயற்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய இடம் வகுத் தாலும், பொதுநல சேவை செய்யும் சங்கங்கள் முன்மாதிரி யாக நின்று அந்தந்தச் சமூகத்தின் இயற்கை வளங்களைத் திறம்படப் பயன்படுத்த வேண்டிய ஆலோசனைகளை பொதுமக்களின் கூட்டங்களில் எடுத்துரைத்து விளங்கப்படுத்த வேண்டும். இந்து முஸ்லீம்களின் ஒற்றுமைக்காகப்பாடுபட்டு, மண்ணுலக வாழ்வின் வேற்றுமை கண்ட மகாத்மாகாந்தி கூடச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் அனைத்தும் சீர்தூக்கிப் பார்த்து நெய்யும் தொழிலைத்தான் செய்து முன்மாதிரி காட்டியும், சமூகத்திலும் அறிமுகப்படுத்தினார். அதனால்தான் நாம் செய்யும் தொழிலாக நெய்யும் தொழிலைக் கிராமம் முழுவதும் கடைப்பிடிக்க முடியாத நிலையில், கோழிவளர்ப்பைப் பொதுநல சேவாசங்கத்தின் மூலம் அறிமுகப்படுத்த இருக்கின்றோம். காரைநகரைப் பொறுத்தவரையிலே, உபஉணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தண்ணீர் வசதியின்மையால் முழு நிலப்பகுதியையும் பயன் படுத்தமுடியாது, ஒரு சில பகுதிகளே பயன்படுத்தப்படுகின்றன. தஞ்சாவூர் பொம்மை உலகிலேயே சிறந்து விளங்குவது போல் திண்ணைபுரத்துக் களிமண்ணை உபயோகித்து மட்பாண்டங்களையும் பொம்மைகளையும் உருவாக்க வேண்டிய நடவடிக்கைகளையும், பனம் பொருள்களை உபயோகித்துப் பலவித உணவுப் பொருள்களையும் சுவையூட்டும் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்கப் பொதுநல சேவை செய்யும் சங்கங்கள் ஆவன செய்ய வேண்டும். அதற்குச் சமூகத்தவர்களாகிய நாம் ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். தனிப்பட்ட ஒருவர் எடுக்கும் முயற்சிகளிலும் பார்க்கப் பொதுநல சேவை செய்யும் சங்கங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆகவே நாம் இது போன்ற சங்கங்களில் அங்கத்துவம் வகிப்பதன்மூலம் எமது நோக்கங்களையும் ஆலோசனைகளையும் கூறி சமூகத்தை வழிநடத்திச் செல்ல முடியும்.

இப்படிப் பலவிதமாகப் பொருளாதாரத்துறையிலே, கல்வித்துறையிலே, சமயத்துறையிலே சமூகத்தில் சீர்திருத்தங்களைச் செய்கின்ற எத்தனை சங்கங்கள் இங்கிருக்கின்றன. இந்திய சுதந்திரத்தேரின் சாரதியாக விளங்கிய பாரதியார் கூறியதுபோல '' எந்தையும், தாயும் மகிழ்ந்து குலாவிச் சிந்தை மகிழ்ந்திருந்த நம் நாட்டுக்காக நம் முந்தையர் வாழ்ந்து மடிந்த இப்பொன் நாட்டுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களாகிய நாம் என்னத்தைச் செய்தோம்? வட்டிலிலே சோறுபோட்டு வட்டநிலாக் காட்டி வளர்த்த பெற்றோர்களாய் நீங்கள் – மகனும் மருமகளுமாக மஞ்சத்திற்குச் செல்லும் அந்நாளே தஞ்சம் எனக் காத்திருக்கும் நீங்கள் – குச்சுவீட்டுக் கோமகனாக இல்லாது, மச்சுவீட்டு மாமேதையாக விளங்க வேண்டும் எனக் கனவுகாணும் நீங்கள்–என்னத்தைச் செய்தீர்கள், அவர்களின் நல்வாழ்வுக்காக என்று கேட்டால் பதில் கூறமுடியாது வாய்பொத்திக் கைகட்டி, நிற்கவேண்டிய நிலையில் உள்ளோம். காரைதீவு காரைநகராகியது. திரும்பிய திசையெல்லாம் நம் ஊரவன் இருக்கின்றான். ஆனால் பாராளுமன்றத்தில் மட்டும் நம் ஊரவன் இல்லை என்ற குறையையும் தீர்த்து விட்டோம். பல கைத்தொழில்களை வெளியிலே நிறுவி நம் பேரை நிலைநாட்டிவிட்டோம். திரைகடல் ஓடித் திரவியம் தேடினோம். ஆனால் பொதுநல சேவை செய்யும் ஒரு சிறந்த சங்கத்தையாயினும் உருவாக்கி வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு வழிகாட்டவோ அல்லது வழிகாட்ட முன்வந்திருப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கமோ இல்லாது – நம்மால் ஆகாது நாதன் விட்ட வழி என்று நம்பி நடைப்பிணமாக இருக்கின்றோம். நாம் மேலே எறிந்த கல் கீழே வரும் என்ற எழிய உண்மையைக்கூட சேர் ஐசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானி சொல்லித்தான் நாம் அறியக்கூடியதாக இருந்தது. அதுபோலச் சமூகம் சீர்திருத்தமடைய பொதுநல சேவை செய்யும் சங்கங்களின் சேவைகள் இன்றியமையாதது என நம்மவர்கள் தெரிந்திருந்தும் உணராதிருக்கின்றார்கள். இதை இளைஞர்கள் உணரவைப்பார்கள் என நினைக்கிறேன். உழைப்பில்லா இளைஞர்கள் பணவசதி இல்லாமையால் பெற்றோர்களையும், பெரியோர்களையும் தேடிச்செல்லும் பொழுது அவர்களுக்கு ஊக்கமளிக்கத் தவறுவார்களாக இருந்தால், நம்மவர்களுக்குப் பிழைக்க வழிகாட்டி களவு எடுக்கப் பொய் சொல்ல, தட்டிச்சுத்த தட்டிக் கொடுக்கிறார்கள் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கத்துதித்த தங்கத்தாத்தா ரவீந்திரநாத்தாகூர் மரநிழலில் தொடங்கிய சாந்தி நிகேதனம் ஆலவிருச்சம் என வளர்ந்து அரிய பல சேவை செய்கிறது என்றால், இந்தியாவிலே ஆறுமுக நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலை திறம்பட நடைபெறுகிறது என்றால், மட்டக்களப்பிலே விபுலானந்தர் வித்தியாலயம், வடமாகாணத்தில் இராமநாதன் கல்லூரி, கனகரத்தினம் மாகாவித்தியாலயம், காரைநகரிலே சுப்பிரமணிய வித்தியாசாலை போன்ற கல்லூரிகளும் நிறுவனங்களும், ஸ்தாபகர்கள் இறந்தும் இருந்த காலத்திலும் பார்க்கச் சிறப்பாக நடைபெறுகின்றன என்றால் ஏன்? நமது நாட்டில் ஒரு சங்கமாகுதல், உருவாக்கி தன் ஒளிவீசிச், சோக்கிரட்டீஸ் கூறியது போல ''இருண்ட வீட்டுக்கு ஒளி விளக்காக'' இருந்து வழிகாட்டக் கூடாதா. இந் நிறுவனங்களினதும் ஸ்தாபகர்களின் சொத்துக்கள் இருப்பதாலும், அவற்றை அரசாங்கம் ஏற்று நடத்துவதாலும், அவர்களின் வாரிசுகளின் முயற்சியாலும் தான் சிறந்து இயங்குகின்றன என ஒரு சிலர் கூறலாம் ஏன்? அமெரிக்காவிலே விவேகானந்தரின் பேரிலே ஒரு சங்கம் இயங்க அவரின் சொத்துக்கள் உண்டா? அவருக்கு ஏதுவித சொந்தமோ, பந்தமோ இல்லாதவர்கள் தான் நடத்தி வருகிறார்கள் எனலாம், இதனால்தான் தெள்ளுதமிழ் வள்ளுவரும் '' புணர்ச்சி பழகுதல் வேண்டாம், உணர்ச்சிதான் நட்பாங்கு இளமைதரும்'' என்றார். இதற்கமைய ஒருவகை உணர்ச்சிதான் இவ் விவேகானந்தரின் பேரில் உள்ள சங்கத்தின் மலர்ச்சிக்குக் காரணம் எனலாம்.

நாம் கிராமச் சங்கத்தில் அங்கத்துவம் வகுப்பதற்குக் காட்டுகின்ற ஆர்வம் – ஒரு ப. நோ. கூ. சங்கத்தில் அங்கத்துவம் வகுப்பதற்குக் காட்டுகின்ற ஆர்வம் – ஒரு பொதுநல சேவைசெய்யும் சங்கத்தில் அங்கத்துவம் வகுப்பதற்குக் காட்டவில்லையே என உணரும்போது – இது சிரிப்புக்கிடமானது மட்டுமல்ல சிந்தனைக்குரியதும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எளிமையினுல் ஒரு தமிழன் படிப்பில்லை என்ருல், இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" என்ருன் பாட்டுத்திறத்தாலே வையத்தைப் பாலித்திட விரும்பிய பாவலன் பாரதிதாசன். இதற்கமைய வசதியில்லை என்பதனுல் நம் இளைஞர்களின் எதிர்காலம் பாழ் அடைந்தால் நாம் அனைவரும் தலைகுனிய வேண்டும்.

அப்பரும், சுந்தரரும், ஆளுடைப்பிள்ளையாரும் எப்படிப் பாடினுலும், என்னத்தைச் செய்தாலும் அன்புக்கு உதாரணம் கூறுகையில் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு" என்ருர் திருவாசகம் தந்த மணிவாசகர்.

கண்ணப்பர் ஆலயங்களுக்கு ஆயிரக்கணக்கில் கொடுத்தவர் அல்லர். தன் அன்பை ஆண்டவனுக்குப் பொன் படைத்துப் பொருள் படைத்துத் தான் காட்டியவர் அல்லர். திருக்காளத்தியப்பருக்குப் புலால் படைத்துத் கண்படைத்துத் தன் அன்பைச் செலுத்தியவர். இதிலிருந்து எவர் எதைச் செய்தாலும் தூய அன்புடன் செய்யவேண்டும். இதைத்தான் அறிவுலக மேதை அறிஞர் அண்ணுவும் "ஆண்டவனை நாம் ஏற்கிருேமா? என்றது அல்ல ஆண்டவன் நம்மை ஏற்கிருரா? என்பதுதான் பிரச்சினை என்ருர்.

ஆகவே பொதுநல சேவா சங்கங்களோ, சனசமூக நிலையங்களோ வளர்ச்சியடைய விரோத, குரோத மனப்பான்மை இல்லாத ஒத்துளைப்புத்தேவை! இதுவே உங்களது சேவை. அது என்றென்றும் இந் நிறுவனங்களுக்குத் தேவை!!

எந்தப் பெரிய இலட்சியத்தை வேண்டுமானுலும் எடுத்துக் கொள்ளுங்கள்; அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர்கள் முன் வருகிருர்கள் என்ற எண்ணிக்கை முக்கியமல்ல; அதற்காக முன் வருபவர்கள் எத்தகைய மனப்பாங்குடையவர்கள் என்பதே வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும்!

— மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலா கபே

NO. 364, கே. கே. எஸ் வீதி

யாழ்ப்பாணம்.

சிற்றுண்டி உணவுகளுக்கும்
சிறந்த தேனீர், காப்பி, குளிர்பானங்கள்
முதலியவற்றிற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

உரிமையாளர்:
T. அருளம்பலம்

* * *



# * சோமன்ஸ் *

மொத்த, சில்லறை, பிடவை வியாபாரம்

இல. 49, நவீன சந்தை

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் றேடியோவை டோர்ச் பாட்டரியில்
இயங்க வைக்க வேண்டுமா ?
ரேப் றெக்கோடர்கள், மின்சார சாதனங்கள்
பழுதுபார்க்க வேண்டுமா ?
எந்த றேடியோ உப உறுப்புக்களாவது
வாங்க வேண்டுமா ?
இன்றே விஜயம் செய்யுங்கள்.

**ஈஸ்வர் கோப்பறேசன்**

(வடமாகாண றேடியோ உப உறுப்பு இறக்குமதியாளர்கள்)

18, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி எண் : 7308



அரசாங்க பாஷையில் தேர்ச்சி பெற்றுவிட்டீர்களா ?

**இன்றே முந்துங்கள் ! உடனே சேருங்கள் !!**

சிங்களம், தட்டச்சு ஆகிய பாடங்களும், பாடசாலை மாணவர்கட்கான பிரதான பாடங்களும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் தினமும் கற்பிக்கப்படும்.

சிறுர்களுக்கான " பாலர் வகுப்பு " கிழமை நாட்களில் காலை 8 மணி முதல் நடைபெறும்.

குறுகிய காலத்தில், குறைந்த செலவில் சிறந்த கல்வி பெற விபரங்கட்கு : அதிபர்

**உஷா தேசிய கல்வி நிலையம்**

பதிவு எண் : 5801

சிவன் கோவில் வீதி —— காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியமும் — சோதிடமும்

( டாக்டர் த: சிவானந்தன், மணற்காடு காரைநகர் )

எதிர்கால வாழ்க்கையை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று விரும்பாத, அக்கறை கொள்ளாத, சமுதாயமே இன்றைய நாகரீக உலகில் இல்லையெனலாம். அதற்கமைய மனிதனின் எதிர்காலவாழ்வினை ஒளிவாய்ந்ததாகவும், இன்பகரமானதாகவும் ஆக்கியளிக்கக்கூடிய பெற்றிமையும் பேறும் எல்லாமே வைத்தியத்திற்கும் சோதிடத்திற்கும் தான் சிறப்பாக (அமைந்துள்ளது) உண்டு எனலாம். ஆம், இந்த உண்மையை அறியமட்டும், ஆற்றல் இருந்துவிட்டாற்போதும் எமது நாடு, எமதுமக்கள் முன்னேறுமலிருக்கமுடியாது. எனவே, இச்சந்தர்ப்பத்தில் வைத்தியமும் சோதிடமும் என்னும் பொருள் பற்றிச் சிற் து ஆராய்வோம். மனித நலன்களில் அக்கறை கொண்டவர்கள், நலன்கள் இரண்டு என்பதையறிவார்கள். ஒன்று உடல் நலம், மற்றது உளநலம், இவ்விருநலன்களும் குறைவுறுமாயின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகி விடுகின்றது. எனவே, இவ்விருவித நலன்களையும் பெற்றுவாழ வைத்தியமும், சோதிடமும் அவசியமாகின்றன. வைத்தியத்தின் மூலம், உடலின் நலத்தைப் பேணிக்கொள்ளலாம். இதனுல், எதிர் காலம் பிரகாசமடையும், விருத்திபெறும். சோதிடத்தின் மூலம், உள நலத்தைப் பெறலாமென்பது எனது நம்பிக்கையாகும். வைத்தியத்தை எடுத்துக் கொண்டால், மனிதனுக்கு ஏற்படக்கூடிய தேகதாருண்யம் பற்றிய குறைகளையறியவும் அவற்றைப் போக்கவும் அது வழிகாட்டுகின்றது. இப்படியாகவிருந்த போதிலும் இவ்வுண்மைகளை நாம் தெரிந்திருக்கிறோமாவென்றுல் கிடையாது என்றே சொல்ல வேண்டும். எனவே, இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டுமானுல் முதற்கண் நாம் சோதிடத்தை அறிய வேண்டும். எந்தவொரு சாஸ்திரத்தை எடுத்துக் கொண்டாலும், அங்கு இரண்டு விதநிலைகளை நாம் காணலாம், ஒன்று கோட்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Theory) உணருதல் எனப்படும். மற்றது சாதனை (Practice) செயலாக்கல் எனப்படும். இந்த இரண்டு உண்மைகளையும் அறிந்தாற்றான் மனிதன் மனிதனாக வாழமுடியும். எனவே எங்களைப் பொறுத்தமட்டில் சோதிடம் (Theory) வைத்தியம் (Practice) ஆகவும் கொள்ளல் சிறப்புடையதாகும். இந்த உண்மைகளை முதலில் மனித உள்ளத்திற்புகுத்தி மென்மேலும் எதிர்கால சுபீட்சப்பாதைக்கு இட்டுச் செல்லும் ஆற்றலை சோதிடத்தின் இயல்பால் நாம் அறியலாம். முதலிற் கோட்பாடுகளைக் காட்டுவதுடன் முடிவில் சாதனைகளை நிலைநாட்டவும், அது வழிவகுத்து விடுகின்றது.

இது இப்படியிருக்க, இந்த உடலுள நலன்களைக் காட்டும் இந்த வைத்தியத்திற்கும் சோதிடத்திற்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்புண்டு என்பதையும் நாம் காண்போம். இவ்விரண்டுக்குமுள்ள தொடர்பில் முக்கியமானது நிதானம். சடசத்துவான எமக்கு ஏற்படக்கூடிய நோய்களை வைத்தியத்தின் மூலம்தான் கண்டுகொள்ள முடியுமென்பது முற்றிலும் தவறானதாகும். இதனாலன்றோ எமது ஆதி வைத்தியர்களான சித்தர்களும், முனிவர்களும் சோதிட வைத்தியத்தைத் தமது இருகண்களாகப் போற்றினார்கள். உதாரணமாக, ஒரு வைத்தியனிடம் நோயாளியொருவன் வந்துவிட்டானென்று வைத்துக்கொள்வோம். உடனே வைத்தியனானவன் யாது உணவருந்தினீர்? மலசலங்கழித்தாயிற்றா? எவ்வெவ்வேதனைகள் காணப்படுகின்றன? என்றெல்லாம் வினவுகிறான். இது மட்டுமா? பெரும்பாலான குணங்களை நோயாளியின் மூலமே கேட்டு அறிய வேண்டியதாயிருக்கின்றது. எனவே, சோதிடம் கற்ற வைத்தியனானவன் இச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு நோயைப் பரீட்சிப்பான் என ஆராயுங்கால், முதலில் வைத்திய முறையில் கூறிய அஷ்டாங்கப் பரீட்சைகளான நாடிஸ் பரிசம், நா, நிறம், விழி, ஒலி, மலம், மூத்திரம் ஆகிய வற்றிற்கும் அப்பால் முதலாவதாக நிதானத்தை (Pathology) எடுத்துக்கொள்வான். இந்த நிதானமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதப்படுகின்றது. நோய் ஏற்பட்டதற்குரிய மூலகாரணத்தை அறிந்து கொள்வதும், வெளித்தோற்றத்தைக் கொண்டு அறிந்துகொள்வதும் வைத்தியத்தில் வரும் நிதானமாகும். சோதிடத்தில் குறிப்பிடப்படுவது இவையன்று. ஒரு வைத்தியன் என்னவென்ன விடயங்களை நிதானிக்க வேண்டுமென்று நினைக்கின்ற எண்ணம்தான், சோதிடத்தில் வரும் நிதானமாகும். நோயைப் பலவித கருவிகள் மூலம் கண்டு கொள்ளுதல் ஒருவகை நிதானம். இன்னவின்ன கருவிகள் மூலம்தான் அறியவேண்டுமென்பது இன்னொருவகை நிதானம் இவைகள் உளச்சார்பானவை. வைத்தியனானவன் ஒரு நோயாளியைக் கண்டவுடன், எவ்வெவ்விடங்களை நிதானிக்க வேண்டுமென்ற சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய நினைப்புத்தான், அந்த உணர்ச்சிதான் (Theory) கோட்பாடாகிப் பின்னர் செயலாக (Practice) மாறுகின்றது. இத்தருணத்திலேற்படக்கூடிய திகைப்பின் பிரதிபலிப்பே சோதிடத்தில் காணப்படும் நிதானமாகும். எனவே வைத்தியன் நோயாளிக்கு ஏற்பட்ட நோயைத் தீர்க்க வேண்டிய சந்தர்ப்பத்தில், தனக்கு ஏற்படக்கூடிய நோயைத் தீர்க்கவேண்டியவனாகிறான். இந்த நிலைமையில் சோதிடமே வைத்தியனின் மனநோயையும் நோயாளியின் நோயையும் தீர்க்கும் கருவியாகின்றது. ஒருவரின் கையைப் பிடித்துப் பார்த்தவுடனேயே, அவருக்கு என்னவென்ன நோய்களிருக்கின்றனவென்றும் சொல்லிவிடலாம். இது சோதிடத்தின் முக்கிய சிறப்பாகும். கைநகங்களைப் பார்க்கும் போது நகங்களின் அடிப்பாகத்தில் சதைப்பகுதியிலிருந்து முளைவிடும் பகுதியின் மேற்பாகத்தில் வெண்நிறம் காணப்படுமாயின், இரத்தக்குறைவு, சோகை, பாண்டு, பெலவீனம் என்பன காணப்படுதலையும்; நீலநிறம் காணப்படுமாயின், இருதயம் சம்பந்தமான ரோகங்களும், விஷநீர்ப் பீடைகளும் காணப்படும். மேலும், சிவப்பு நிறம் காணப்படுமாயின், அதிகமான இரத்த அமுக்கமும், அதிபாராக்கிரமும்; மஞ்சள்நிறம் காணப்படுமாயின் பித்தம் சம்பந்தமான நோய்களும் பலவீனமும் காணப்படும், என்பதையறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இதுமட்டுமன்றி, இருதயபுத்திரேகைகளின் மூலம் ஒருவருடைய வன்மைமென்மைகளையும், புத்திக் கூர்மையையும், அதன் குழப்பங்களையும் நாம் அறியலாம். மேலும் சூரியன் பலவீனமடையின், பித்தம் சம்பந்தமான கண், மூல ரோகங்களும், சந்திரன் பலவீனமடைந்தால், இரத்தம் சம்பந்தமான வியாதிகளும், புதன் பலவீனமானால், புத்தி மாறாட்டமும், மூளை வியாதியும், மனோ துக்கமும், வியாழன் பலவீனமானால், மர்மஸ்தான வியாதிகளும், சனி பலவீன மானால், வாதமனோ பீடைகளும், இராகு கேது பலவீன முற்றால், விஷநீர் உபாதைகளுமாகும். எனவே, ஒருவனின் கையைப் பார்த்ததுமே, அவரது உடல் நோயுடன் மன நோயையும், ஒருங்கே அறிந்து விடுகிறான். சோதிட வைத்தியன் அதுவல்லாமலும், ஒருவனின் நடையுடை பாவனைகளின் மூலம், சோதிடஞானவன் நோயாளிக்கு எப்படிப் பிணிகள் ஏற்பட்டிருக்கலாமெனவும் ஊகித்து விடுகிறான். இதனால் நோயைக் கண்டுபிடிக்கவேண்டிய கோட்பாட்டில் ( Theory ) வெற்றியும் காண்கிறான். வைத்தியத்தின்மூலம் அதனைத் தீர்த்துவைக்கும் கருமத்தைச் செய்கிறான். இவர்களைச் சோதிட வைத்தியர்கள் என்றழைப்பதிற் தவறில்லையே.

எனவே, பண்டைக்கால முனிவர்களும், சித்தர்களும் தமது இரு கண்களெனப் போற்றி வளர்த்த "வைத்தியமும் சோதிடமும்" வளர்ச்சிபெற நாம் அயராதுழைக்கவேண்டும். ஒரு தாயின் இரட்டைக் குழந்தைகள் போன்று இக்கலைகள் மறைந்து போகாது, பேணிக் காக்கும் கடமை நம்மனைவரையும் சார்ந்துள்ளது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையும் — சலுகையும்

( இளைப்பாறிய தலைமை ஆசிரியர், தலைவர் காரை: பொ. ந. சே. ச. )

இன்று மக்கள் வாழ்வில் உரிமையும் சலுகையும் பாவும் ஊடும்போல் பின்னிப்பிணைந்துள்ளன. இதனுல், இவை யிரண்டும் மிக இன்றியமையாதன வென்பது தெளிவு. எனினும், உரிமை சலுகையிலும் மேம்பாடுடையது; மூலாதாரமானது. நெசவாளன் பாவின் கண்ணே தான் ஊட்டை ஓட்டித்தான் துணியை நெய்து முடிக்கிருன். அதிலேதான் துணியின் உயர்வினைக் காட்டும் நெசவாளனின் கைவண்ணம் புலப்படுகின்றது. இங்ஙனம் உரிமையை அடிப்படையாகக்கொண்டு சலுகையும் ஒருங்கிணைந்தால், ஒரு நாட்டின் மக்கள் பெறவேண்டியனவாய கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் ஆதியன சிறிதும் பிசகின்றி செவ்விதாய் அவ்வவற்றின் உயர்நிலையை எய்தும். இவை இங்ஙனமாக நாட்டில் கரவு, களவு, கொலை, குரோதம், பொருமை ஆதிய தீச்செயல்கள் தலையெடுக்கமாட்டா. நாடும் மதிப்பிற் குரியதாக உலகில் விளங்கும்.

எனவே இவற்றைப் பயப்பதாய உரிமை, சலுகை என்பன என்னவென்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். உரிமை உலகிற்ருேன்றிய உயிருடைப் பொருட்களெல்லாவற்றிற்கும் இயற்கையில் அமைந்த ஒன்ருகும். இஃது இயற்கையின் நியதிப்படி நடைபெற்று வருவது வெளிப்படை. உதாரணமாக ஒரு பறவை தன்னியல்புக்கேற்ப ஒரு கூடு அமைத்து அதில் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரித்து, அக்குஞ்சுகள் தம்மைத்தாமே பேணி வாழக்கூடிய ஆற்றல் பெறும்வரை அவற்றிற்கு உணவூட்டி வளர்க்கின்றது. தன்னினத்தோடு கூடிக்குலாவி தன் மொழியால் தன் கருத்தை வெளிப்படுத்துகின்றது; செயற்படுகின்றது. இதுபோன்றே மற்றைய உயிருள்ளனவும் என்பதை நாம் அறிவோம். இதில் உரிமையும் சலுகையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. பறவையின் செயல்கள் இங்கு உரிமை யாகின்றன. குஞ்சு பக்குவமடையும்வரை செய்யப்படுவது சலுகையாகிறது. சலுகை என்றும் உரிமையைப் போல் வலுவுடையதன்று என்பது தெளிவாகிறது.

இனி மக்கள் இனம் கூட்டம் கூட்டமாக வெவ்வேறு நிலப்பரப்புக்களில் வாழ்ந்து மொழிபயின்று கால, இட வேறுபாட்டினுல் ஆங்காங்கு நிலை பெயர்ந்து சென்றும் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் ஏனைய உயிர்களினும் சிறந்த தமது பகுத்தறிவால் பலதுறைகளில் விருத்திய டைந்து தத்தமக்குப் பிறப்புரிமையாகவுள்ள வாழ்விடங்களை விட்டு வெவ்வேறு இடங்களிற் சென்று குடியேறியும் வாழ் கின்றனர். இது காலகதியில் மக்கட் பெருக்கத்தால், தொழில் வளம் நாடியும், கலைவளம் நாடியும், பொருளீட்டும் வழி காட்டியும் ஏற்பட்ட ஒன்ருகும். அத்தோடு வேற்று நாட் டவர்களின் படையெடுப்பு, குடியேற்றம், அரசாட்சி, மதப் புரட்சி ஆதியனவும் குடிப்பெயர்வுக்குக் காரணங்களாயின. எப்படி எவ்வெவர் எங்கெங்கு குடியேறியபோதிலும், இன்று நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் இன்றுபோல் அன்று எழவில்லை. அதனுல், உரிமை சலுகை பற்றிய பேச்சுக்களுமே இல்லையெனலாம்.

ஆனுல் இன்ருே வீட்டுக்குவீடு நாட்டுக்கு நாடு, தேசத் திற்குத்தேசம் இனத்துக்கு இனம், சாதிக்குச்சாதி, சமூகத் துக்குச் சமூகம், மொழிக்கு மொழி, மதத்துக்கு மதம் போன்ற பல வேறு துறைகளில் தத்தம் உரிமைகளைப் பற்றிப் பேச்சுக்கள், நாடோறும் அதே வேளையில் சலுகை வேண்டுமென வாதாடுவாரும் ஒருபுறம்.

உரிமை ஒருவருக்குப் பிறப்பினுலும், சட்டமுறையினு லும் வருகின்றது. எந்த வகையினுல் வந்தாலும் உரிமை உரிமையே, பல இன மக்கள் வாழும் நாட்டில் அந்நாட்டுத் தேசிய இனங்கள் எல்லாம் சகல உரிமைகளிலும் சமத்து வம் உடையர். நமது இலங்கையைப் பொறுத்த அளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டைத்தாயகமாகக் கொண்டு வேற்று நாட்டுத் தொடர்பின்றி எந்தவோர் ஆணோ பெண்ணோ இங்கு வாழ்கின்றார் எனின், அவர் மதம், கலை, கலாச்சாரம், தொழில், உத்தியோகம், பொருளாதாரம், போன்றவற்றில் அந்நாட்டின் ஏனையமக்களுக்குரிய சகல உரிமைகளிலும் (மொழி, மதம், கலை, கலாச்சாரம், தொழில், உத்தியோகம் பொருளாதாரம் போன்றவற்றிலும்) சமத்துவமுடையர். அரசு ஒருவரை மற்றவரிலும் குறைவுடையவராகவோ, உயர்ந்த வராகவோ கருதக்கூடாது. இங்ஙனமாகிய அரசாட்சியே ''சோஸலிசம்'' எனவும், சமதர்மம் எனவும், ''சர்வோதயம்'' எனவும் கருதப்படும்.

ஒருநாட்டின் தேசிய இனங்களில் எந்த ஒரு இனமாவது பின் தங்கிய நிலையில் இருந்தால், அவர்களை மற்றைய இனங்களோடு சமமான நிலைக்குக் கொண்டுவருவதற்காக அவ்வினத்தவருக்குச், சிலசலுகைகளை, உதவலாம். ஆனால், அச்சலுகைகள் ஒருகாலவரையறைக்குட்பட்டதாக அமைய வேண்டும். சலுகைகளை துர்ப்பிரயோகம் செய்வது இனத்தையே படுகுழியில் இடுவதாகும்.

இன்று அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த சுதந்திர நாடுகளிடையில் ஜனநாயகம், சோஸலிசம், சமதர்மம் முதலியன பேசிக்கொண்டு உண்மைக்கு மாறாய் மாறுபாடுடைய நாட்டை உயர் நிலைக்கு வரவொட்டாமற் செய்வதாய் பல ஆதிக்கங்கள் தோன்றி பெரும்பான்மையினம் சிறுபான்மையினத்தின் உரிமைகளை வழங்க மறுக்கின்றனர். இதனால் பல்வேறு தொல்லைகள் தோன்றியுள்ளன. இவ்விதமான செயற்பாட்டின் முடிவுதான் செயீத் முஷிபூர்றகுமானின் தலைமையில் தோன்றியுள்ள வங்காளமாகும். இதற்கும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வேற்று நாட்டவரின் உதவிகள் கிடைத்தமையும், கிழக்கு வங்க மக்களின் ஒன்றுபட்ட உரிமை வேட்கையுமே அவர்கள் அடைந்த வெற்றிக்குக் காரணமாயின. அவர்கள் அடைந்த தொல்லைகள், அழிவுகள், நட்டங்கள் அளப்பில. எனினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைப் பொருட்படுத்தாது திடசித்தமும் கடவுள் நம்பிக்கையும் கொண்டு போராடினர். அதன் பலனையும் பெற்றனர். இங்குதான் குருசேத்திரத்தில் பகவத்கீதை தோன்றியதன் உண்மை புலப்படுகின்றது. சத்தியம் வெல்லும், அசத்தியம் தோற்கும் என்பது எம் முந்தையோர் சொல்லி வைத்த பேருண்மை. எனவே, நாம் ஒவ்வொருவரும் உண்மை நெறியில் தவறாது ஒழுகி எமது உரிமையை சந்தர்ப்ப வாய்ப்பாகக் கிடைக்கும் ஒரு சில சலுகைகளுக்காக இழத்தல் தகாது. அஃது, இனத்தை வேர் கொல்லும்; அருநரகில் சேர்க்கும். எனவே, நாடும் நாமும் நலம்பெற உரிமை இழக்காது வாழ்வோமாக.

வழிவகையற்றோர்க்குச் செய்யும் உதவியே சலுகையாகும். ஆனால், வழிவகையுள்ளோர் சலுகைகள் பெற விரும்புவது அவர்களை அழிவுக்கே கொண்டு செல்லும்.

(சங்கம்)

உரிமைகளை மட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைந்திருக்கிறார்கள். கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்.

(மகாத்மா காந்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றே வாங்கிப் பாவியுங்கள்

கணபதி ஸ்ரோர்ஸ்

யானை மார்க்

## நல்லெண்ணெய்

சுத்தமான இலங்கை எள்ளில்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுகொள்ளலாம்

## கணபதி ஸ்ரோர்ஸ்

18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

K. S. K. சீலைக் கவனித்து வாங்குங்கள் போன்: 225

வடமாகாணத்தில் பிரபலமாகவும் நீண்ட பாவனையும்
மிகக் குறைந்த விலையும் எழில்மிகு கவர்ச்சியும்
உடையன

## அன்னம்ஸ் தயாரிப்புக்கள்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

## அன்னம்ஸ்

55, 56 மொடேன் மார்க்கட் — யாழ்ப்பாணம்

எமது தொழில் அகம்

மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்
காமாட்சிக் கேணியடி, காரைநகர்

விற்பனை நிலையம் :

55, 56 மொடேன் மார்கட் — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாஜியார்ஸ் நகை மாளிகை

82/6 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 654

கிளை 66, 68 செட்டியார் தெரு
கொழும்பு — 11
டெலிபோன்: 24541

# டிமெல் தளபாட நிலையம்

97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்றே உங்கள் வீட்டுத்தளபாடங்களுக்கு உடனே விஜயம் செய்யுங்கள். எம்மிடம் சிறந்த தளபாடங்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களும் கவனித்துச் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும்

உரிமையாளர்: M. S. A. பெர்ணன்டோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றவர் போற்றும் வண்ணம் காரையூர் சிறக்க வேண்டும்.

எழுதியவர் : வே. குமாரசுவாமி, சடையாளி, காரைநகர்

நற்றமிழ் வளர வேண்டும்
நம்மதம் தழைக்க வேண்டும்
ஒற்றுமை காண வேண்டும்
ஊக்கமோ டுழைக்க வேண்டும்
குற்றமது களைய வேண்டும்
குணங்களை ஏற்க வேண்டும்
கற்றவர் போற்றும் வண்ணம்
காரையூர் சிறக்க வேண்டும்.

நன்னீர் காண வேண்டும்
நற்பயிர் செய்ய வேண்டும்
என்னருமை யூரென்ற உணர்வு
என்பெல் லாமிருக்க வேண்டும்
முன்னோர் தம்பெருமை தனையறிந்து
முன்வர முயல்தல் வேண்டும்
மன்னரும் போற்றும் வண்ணம்
மதிப்பொடு நடக்க வேண்டும்.

ஆலயம் தோறும் நல்ல
அறிவுரை பகர வேண்டும்
நூலினை நூற்க வல்ல
நுண்தறி நிறுவ வேண்டும்
காலத்தைப் பொன்னாய்க் கொண்டு
கருமங் களாற்ற வேண்டும்
சோலைகள் ஆக்க வேண்டும்
தூய்மை யாய்வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*To The Humble Peoples of Karainagar,*

The old order changeth yielding place to the new and God fulfils Himself in many ways.

The old capitalistic structure has started to crack up everywhere, and sooner or later, it will come down completely with a big bang! Whatever attempts may be made by the capitalists to set back in position the old structure, will end in frantic effort and dismal failure.

The rising tide of socialism will sweep through this village too. Therefore, we have got to accept this new way of life. Times have changed, and will continue to change and so we have to adjust and attune ourselves to this new and necessary change.

The ways of "Annai Parasakthy" (அன்னை பராசக்தி) are unpredictable! She alone knows why she prefers the introduction of a social system, which will ultimately pave the way to the establishment of a socialist pattern of society.

Perhaps, She feels that Her wealth has not been distributed fairly and evenly amongst all Her children. Naturally, she must have recoiled to see the deplorable state in which many of Her children are, and what is more, She could not have been too happy to see Her wealth concentrated in the hands of a few wealthy folk.

As a little child, I wondered why the rich people should be despised so much As years rolled by, and as I grew older and older and acquired more and more wisdom, I began to realise the truth of it all.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You see these people virtually sponged on the poor peasant, the ordinary farmer, the miserable middle-class white-collared worker, the lower-class worker, resulting in their being despised by this lot of people, who had come up the hard way in life.

Now the time has come for the rich to be of some service to the poor. They could do so directly, and through various social bodies, which are striving hard to promote the welfare of this village.

If they fail to do so, they will regret it the rest of their lives. For, if they remain close-fisted, then they will make way for communism to infiltrate easily into this country.

In India the Bhoodan Movement, under Vinoba Bhave, has done commendable work. It has through tapping the fundamental human-love quality and through pursuasive methods managed to obtain large acreages of land and surplus wealth from the land lords or zamindars etc. and distributed them among the poor peasants and farmers.

So you will see a socialist society come into being, without jeopardising democracy in any way. I am making a clarion call to YE WEALTHY FOLK of this village to come forward and help the social bodies in promoting their welfare work by your generous donations and social obligations.

Well, the Karainagar Pothu Nala Seva Sangam once again wishes to make its humble appeal to you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

all to join or help this potent body in achieving its social goal within the democratic field. To us socialism is the first goal. From it will flow the rest.

There is no hiding the fact that if the country is to make rapid progress, then one community cannot be developed at the expense of the other, nor should one community be ignored for the welfare of the other. This truth should be borne in the minds of all right - thinking men, women and children.

To blame the Government is the greatest folly. Wherever the Government adopts progressive social measures, we should support such well - intended actions, unstintedly. If, however, you feel that the Government has not done enough for you, then why funk, tell them so. Let us not pursue a suicidal policy, where ultimately both the communities will have to perish.

Let us, first of all, learn to be free, frank, and fearless in our thoughts, words and actions and I have no doubt in my mind that Lord Kataragama, ( **கதிர்காமக் கந்தன்** ) the presiding deity over the whole country, will help both the communities to understand each other better, to adopt a give and take policy through His boundless Love and everflowing Grace.

MAY THERE BE PEACE, PLENTY AND HAPPINESS IN THIS BEAUTIFUL ISLE FOREVER AND FOREVER AND FOREVER !!!

**Thank Ye All**

**Sgd. M. PARAMANATHAN**
Hony. Secretary
K. P. S. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தனிப்பட்ட நலத்திற்காக வாழ்வதில்லை. எல்லோருடைய நலத்திற்காகவே வாழ்கின்றனர். இந்தப் பொதுநல உணர்ச்சியே, மனிதகுலம் தன் சக்தியனைத்தையும் பயன்படுத்தி உயர் வளர்ச்சி காண்பதற்கான சூழ்நிலையை நல்குகிறது.

*(ஸ்ரீ அரவிந்தர்)*

அடுத்து வரவிருக்கும் சங்கப்பிரசுரங்களில் நீங்கள் விளம்பரம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்.

தங்கள் வியாபாரம் விருத்தியுறும்!
பொதுநல சேவைகள் வளர்ச்சியுறும்!
இதனால் இவ்வையகம் துலக்கமுறும்!

# * விளம்பர விகிதம் *

வெளி அட்டை - ரூ 75 - 00

உள் அட்டை - ரூ 50 - 00

உள் முழுபக்கம் - ரூ 40 - 00

உள் அரைப்பக்கம் - ரூ 20 - 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், விவசாயம், கல்வி, கலாச்சாரம், சமயம், வளம்பெற காரைநகர் பொதுநல சேவா சங்கமும், இதன் சக்கலாவோடை கிளேச் சங்கமும், மேற்கொள்ளும் முயற்சி களுக்கு எங்களது வாழ்த்துக்கள். மற்றும் பகுதிகளிலும், கிளேச்சங்கங்கள் உருவாக வேண்டும். நாடுசெழிக்க, மற்றும் கிராமங் களும், நகரங்களும் பொதுநல சேவைகளில் ஈடுபாடுகொள்ள வேண்டும். அப்போ சுபீட்ச மான வாழ்வு எல்லோருக்கும் கிட்டும்.


# க. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்

191, மெயின் வீதி,

எட்டியாந்தோட்டை.


அச்சுப்பதிப்பு: ஸ்ரீ முருகன் அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org